**செய்தி வெளியீடு எண்: 782** **நாள்: 29.12.2012**

**பத்திரிக்கைச் செய்தி**

தற்போது நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைகளின் புழங்கு காலத்தை 31.12.2012க்கு பின்பும் 01.01.2013 முதல் 31.12.2013 வரை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கும் வகையில் உள்தாள் அச்சடித்து குடும்ப அட்டைகளில் இணைத்து வழங்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்உத்தரவிட்டுள்ளார்கள் இதன்படி 01.01.2013 முதல் நியாயவிலை கடைகளில் குடும்ப அட்டைகளில் உள்தாள்கள் இணைத்து வழங்கும் பணி துவங்க உள்ளது. இப்பணி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து துறை உயர் அலுவலர்கள் மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் இன்று (29.12.2012) முற்பகல் எழிலகம் கட்டிடத்தில் 5வது தளத்தில் உள்ள வருவாய் நிர்வாகத் துறையின் கூட்ட அரங்கில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

1.திருமதி.எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

2.திரு.பெ.மு.பஷீர் அஹமது, இ.ஆ.ப.,
ஆணையாளர்,
உணவு பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை.

3.திரு.எம்.சந்திரசேகரன், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம்

4.துணை ஆணையாளர் சென்னை நகரம் வடக்கு/தெற்கு

5.அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள்.

**மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவுரைகளை வழங்கினார்**

தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளை புழங்கு காலத்தை 31.12.2012க்கு பிறகு 01.01.2013 முதல் 31.12.2013 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கும் வகையில் உள்தாள் அச்சடித்து குடும்ப அட்டைகளில் இணைத்து வழங்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அரசு அச்சகங்களில் உள்தாள்கள் அச்சடிக்கப்பட்டு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையை செயல்படுத்த வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் முறையாக பின்பற்றி தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், குடும்ப அட்டைதாரர்கள் சிரமமின்றி தங்கள் குடும்ப அட்டைகளில் உள்தாள்களை இணைத்து செல்லும் பொருட்டும் சுழற்சி முறையில் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குடும்ப அட்டைகளுக்கு உள்தாள்கள் இணைத்து வழங்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை பின்பற்றி ஒவ்வொரு நாளும் எந்தெந்த குடும்ப அட்டைகளுக்கு உள்தாள்கள் இணைக்கப்பட உள்ளன என்பதை குடும்ப அட்டைதாரர்கள் நன்கு அறியும் வண்ணம் நியாயவிலை கடைகளில் விளம்பரப்படுத்த வேண்டும்.

1000 மற்றும் அதற்குமேல் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள நியாயவிலை கடைகளில் குடும்ப அட்டைகளில் உள்தாள்களை இணைத்து கொள்ள குடும்ப அட்டைதாரர்கள் அதிக எண்ணிக்கையில் வரக்கூடும் என்பதால் அவர்களுக்கு எவ்வித சிரமமுமின்றி இச்சேவையை வழங்கும் பொருட்டு கூடுதல் பணியாளர்களை இப்பணியில் ஈடுபடுத்தி குடும்ப அட்டைகளின் புழங்கு காலத்தை 2013ம் ஆண்டிற்கு நீட்டிக்கும் பணியை செவ்வனே மேற்கொள்ள வேண்டும்.

கடந்த 2012ம் ஆண்டு குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டபோது குடும்ப அட்டைகளின் விலாச மாற்றம்/ திருத்தம், குடும்ப உறுப்பினர்கள் பெயர் சேர்த்தல்/நீக்கல் செய்யுமாறு பல குடும்ப அட்டைதாரர்கள் ஆர்வத்துடன் தெரிவித்திருந்தனர். இவர்களில் இதுவரை மாற்றங்கள்/ திருத்தங்களை குடும்ப அட்டைகளில்

மேற்கொள்ளாத குடும்ப அட்டைதாரர்கள் எவரேனும் இருப்பின் அவர்களது கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் விண்ணப்ப படிவங்கள் அச்சடித்து வழங்கப்பட்டுள்ளன. அவற்றை சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி விண்ணப்பத்தை பூர்த்தி செய்து பெற வேண்டும்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நியாயவிலை கடைகளில் முன்னதாகவே அத்தியாவசியப் பொருட்களை பெற வேண்டும் என்ற நோக்கில் குடும்ப அட்டைதாரர்கள் ஜனவரி மாதம் முதல் வாரத்திலேயே அதிக எண்ணிக்கையில் வரக்கூடும் என்பதால், அதற்கேற்ற வகையில் குடும்ப அட்டைகளில் உள்தாள்கள் இணைக்கும் பணி செயல்படுத்தப்பட வேண்டும்.

நியாயவிலை கடைகளில் 2013ம் ஆண்டிற்கான உள்தாள்கள் இணைக்கும் பணி முறையாக நடைபெறுவதை உயர் அலுவலர்கள் கண்காணித்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மண்டல அளவில் துணை ஆட்சியர்களை கண்காணிப்பு அலுவலர்களாக நியமனம் செய்து மேற்பார்வையிட வேண்டும்.

குடும்ப அட்டைகளில் உள்தாள் ஒட்டி புதுப்பிக்கும் நடைமுறையில், சென்ற 01.01.2012 முதல் 31.12.2012 வரையிலான ஒரு வருட காலத்தில், குடும்ப அட்டைதாரர்கள் கேட்டுக் கொண்ட அனைத்து கோரிக்கைகளும், மாவட்ட ஆட்சியர்களின் மக்கள் குறைதீர் முகாம்களிலும் சிறப்பு பொது விநியோகத்திட்ட முகாம்களிலும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.இந்த வருடமும் அட்டைதாரர்களுக்கு எவ்வித சிரமமும் இன்றி, அட்டைகளைப் புதுப்பிக்கும் வகையில் அவர்களின் பல்வேறு கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான படிவங்களை அந்தந்த அங்காடிகளிலேயே கட்டணம் ஏதுமின்றி பெற்றுக் கொள்ளலாம். இப்படிவங்களை அட்டைதாரர்கள், பூர்த்தி செய்து, தேவையான ஆவணங்களை இணைத்து அங்காடிகளிலேயே ஒப்படைத்துவிடலாம். அங்காடி ஊழியர்கள், இம்மனுக்களை, தங்களிடமுள்ள பதிவேடுகளுடன் ஒப்பிட்டு சரிபார்த்து, மேல்நடவடிக்கைக்கு, அனுப்புவார்கள். தவிர்க்க முடியாத காரணங்களினால், பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை அங்காடிகளில் ஒப்படைக்க இயலாதவர்கள், குறிப்பிட்ட காலகெடுவுக்குள், அந்தந்த வட்ட வழங்கல்/உதவி ஆணையர் அலுவலகங்களில் ஒப்படைக்கலாம்.

அங்காடிகளில், இதற்கென விரிவான ஏற்பாடுகள் செய்யப்படுவதுடன், சம்பந்தப்பட்ட வட்ட/மாவட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் உதவி ஆணையாளர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நியாயவிலை கடைகளில் அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் தேவையான அளவிற்கு இருப்பு வைக்கப்பட வேண்டும். அவை தரமுள்ளவையாக இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

2013ம் ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு அந்தந்தவார சனிக்கிழமைகளில் தவறாமல் மண்ணெண்ணெய் வழங்கப்பட வேண்டும்.

குடும்ப அட்டைகளில் 2013ம் ஆண்டிற்கான உள்தாள் இணைக்கும் பணி நடைபெற்று வருவதால் "தட்கல்" குடும்ப அட்டை நீங்கலாக இதர குடும்ப அட்டைகள் மார்ச் 2013ம் மாதத்திற்கு பிறகு வழங்கப்படும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**